# மஸ்ஜிட் இந்தியா வணிகத் தளத்தில்
# மீண்டும் குவிகின்ற வாடிக்கையாளர்கள்



கோலாலம்பூர், அக். 22-
கோலாலம்பூர் உட்பட கூட்டரசுப் பிரதேசத்திலுள்ள அனைத்து பகுதிகளும் மிகவும் பாதுகாப்பானவை என்று அறிவிக்கப்பட்டிருப்பதை அடுத்து மஸ்ஜிட் இந்தியா நோக்கி இப்போது வாடிக்கையாளர்கள் செல்லத் தொடங்கி விட்டனர்.

கடந்த இரண்டு மாதங்களாக மஸ்ஜிட் இந்தியாவில் மக்கள் கூட்டம் குறையத் தொடங்கியதால் அங்கு வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்தியாவைச் சேர்ந்த ஒரு சுற்றுப்பயணி பாதாளக் குழியில் விழுந்து காணாமல் போன சம்பவம் காரணமாக மஸ்ஜிட் இந்தியாவுக்கு செல்லும் மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறையத் தொடங்கியது.

மஸ்ஜிட் இந்தியாவிலுள்ள லிட்டல் இந்தியா வளாகம் உட்பட அங்கு எல்லா பகுதிகளும் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றன என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் மீண்டும் அறிவித்திருக்கிறது.

எனவே மக்கள் இனி தைரியமாக மஸ்ஜிட் இந்தியா வரலாம். அங்கு பொருட்களை வாங்கலாம் என்று கூட்டரசுப் பிரதேச சிலாங்கூர் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள் சங்கத்தின் தலைவர் சுந்தராஜ் கூறினார்.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மழை பெய்யவில்லை. இதனால் வானிலை மிகவும் சிறப்பாக இருந்த காரணத்தினால் ஏராளமான மக்கள் மீண்டும்



மஸ்ஜிட் இந்தியா வரத் தொடங்கியிருக்கின்றனர். இது மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

இதனிடையே அக்டோபர் 27ஆம் தேதி மாலை 5.00 மணி முதல் மஸ்ஜிட் இந்தியாவில் மாபெரும் கலை இரவு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மஇகா தேசிய துணைத்தலைவரும் தாப்பா நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான டத்தோஸ்ரீ எம்.சரவணன் இந்த நிகழ்ச்சியை தொடக்கி வைப்பார் என்று யூனிட்டி அமைப்பின் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் ஜே.அசோகன் கூறினார்.